**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திரு. எம். சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை**
**2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 05ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**இடைக்கால மனு எண்.10/2025**
**இன்**
**அசல் வழக்கு எண்.142/2019**

M. ரத்தினக்குமார் ..மனுதாரர்/2ம் பிரதிவாதி

..எதிர்..

1. வள்ளி ...1ம் எதிர்மனுதாரர்/வாதி

2. பொன்னம்மாள் (இறப்பு)

3. S. விஜயா

4. V. ஐஸ்வர்யரத்னா

5. ஜெயசித்ரா (எ) அலமேலு

6. விக்னேஷ்மாதவன்

7. ரூபா

8. A. குழந்தைச்சாமி

9. S. மலைச்சாமி

10. G. பாண்டியலெட்சுமி

....3 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 10 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 21.07.2025-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.JP.நல்லையான் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V. அக்கினிராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் முன்னிலையாகியும்> 2ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 1A மற்றும் பிரிவு 151ன் கீழ் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்திரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

இந்த மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும் 1வது எதிர்மனுதாரர் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும் அசல் வழக்கில் பி.வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்த போது தாவா 9வது இலக்க சொத்தை பொறுத்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது என்றும் அதனை பொறுத்து நிருபிக்க சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தற்போது தான் இந்த மனுதாரருக்கு கிடைத்துள்ளது என்றும் எனவே காலதாமதமாக தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்க்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டள்ளது.

**3) 1ம் எதிர்மனுதார் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்:**

இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை மனுதாரரே நிரூப்பிக்க வேண்டும் என்றும் தாவா 9–வது லக்க சொத்தைப் பொறுத்துத்தான் வழக்கு உள்ளதே தவிர 9 வது இலக்கச் சொத்திற்கு கிழக்குப்பக்கம் உள்ள சுப்பையா கோனாரின் தம்பி தங்கச்சாமி என்பருக்குப் பாத்தியப்பட்ட தங்கச்சாமியின் மனைவி ருக்மணி பெயரில் உள்ள சொத்தினைப் பொறுத்து வழக்கு ஏதுவும் இல்லை என்றும் இந்நிலையில் தாவாச் சொத்திற்கு கிழக்கே உள்ள ருக்மணி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் பற்றி மனுவில் மனுதாரர்/2வது பிரதிவாதி கூறியுள்ளது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும் தங்கச்சாமி மனைவி ருக்மணி என்பவர் கிரையம் பெற்றதாகச் சொல்லப்படும் தாவாச் சொத்திற்கு கிழக்கு பக்கமுள்ள சொத்தில் அசல் சர்வே எண் ஏதுவும் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றும் அதே போன்று மேற்கண்ட பத்திரத்தில் சொத்தின் விஸ்தீரணமும் அதில் கண்டுள்ள நான்குமால்களும் தாவா வழக்கிற்கு சம்பந்தமில்லாத நிலையில் உள்ளது என்றும் எனவே மனுதாரர்/2வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள தாவா மனுவும் நிலை நிற்கதக்கதல்ல என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

**4) 5ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3, 4, மற்றும் 6 முதல் 10ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிடும் ஆவணங்களுக்கு பின்னர் மேற்படி சொத்தைப் பொறுத்து ஏற்கனவே சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் A.S.No:69/1969 என்ற மேல்முறையீடு நடைபெற்று அதில் பிறப்பிக்கப்பட்ட

சமரச தீர்ப்பின் அடிப்படையில் தாவா 9 வது இலக்க சொத்தை அதில் உரிமை கோரிய தங்கச் சாமிக் கோனார் என்பவரும் தனது சகோதரான மேற்படி சுப்பையா கோனருக்கு 19.09.1969ந் தேதியிட்ட விடுதலைப் பத்திரத்தை எழுதிக் கொடுத்து பாத்தியப்படுத்திவிட்டார் என்றும் மேற்படி நீதிமன்ற சமரசத்திற்கு முன்னதாக ஏற்பட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்திட வேண்டிய அவசியம் இல்லை என்றும் மேலும், நான்குமால்கள் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்திட வேண்டும் என்றால் அந்த ஆவணங்களின் தரப்பினர்களை விசாரணை செய்து அவர்கள் மூலமாகத்தான் நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ய முடியும் என்றும் மனுதார் அசல் வழக்கினை நடத்திடாமல் காலங்கடத்திடவும் இந்த பிரதிவாதிகளை அலைக்கழித்திட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயும் இரண்டாவது முறையாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

5) இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. 1வது எதிர்மனுதாரர் தரப்பில் தாவாச் சொத்திற்கு கிழக்கே உள்ள ருக்மணி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் பற்றி மனுவில் மனுதார்/2வது பிரதிவாதி கூறியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும் தங்கச்சாமி மனைவி ருக்மணி என்பவர் கிரையம் பெற்றதாகச் சொல்லப்படும் தாவாச் சொத்திற்கு கிழக்கு பக்கமுள்ள சொத்தில் அசல் சர்வே எண் ஏதுவும் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றும் அதே போன்று மேற்கண்ட பத்திரத்தில் சொத்தின் விஸ்தீரணமும் அதில் கண்டுள்ள நான்குமால்களும் தாவா வழக்கிற்கு சம்பந்தமில்லாத நிலையில் உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. 3 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவில் குறிப்பிடும் ஆவணங்களுக்கு பின்னர் மேற்படி சொத்தைப் பொறுத்து

ஏற்கனவே சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் A.S.No:69/1969 என்ற மேல்முறையீடு நடைபெற்று அதில் பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பின் அடிப்படையில் தாவா 9 வது இலக்க சொத்தை அதில் உரிமை கோரிய தங்கச் சாமிக் கோனார் என்பவரும் தனது சகோதரான மேற்படி சுப்பையா கோனருக்கு 19.09.1969ந் தேதியிட்ட விடுதலைப் பத்திரத்தை எழுதிக் கொடுத்து பாத்தியப்படுத்திவிட்டார் என்றும் மேற்படி நீதிமன்ற சமரசத்திற்கு முன்னதாக ஏற்பட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்திட வேண்டிய அவசியம் இல்லை என்றும் மனுதார் அசல் வழக்கினை நடத்திடாமல் காலங்கடத்திடவும் இந்த பிரதிவாதிகளை அலைக்கழித்திட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயும் இரண்டாவது முறையாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் பி.வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்த போது தாவா 9வது இலக்க சொத்தை பொறுத்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது என்றும் அதனை பொறுத்து நிருபிக்க சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தற்போது தான் இந்த மனுதாரருக்கு கிடைத்துள்ளது என்றும் எனவே காலதாமதமாக தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் விதமாகவும் அசல் வழக்கில் உரிய தீர்வு காண்பதற்கு ஏதுவாகவும் வழக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை பெருக்கத்தை தடுக்கும் விதமாகவும் இந்த மனுவை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு பின் என்றால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05ம் நாளான இன்று என்னால் இந்த உத்திரவு அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.